SRI LANKA
DEPOSIT INSURANCE
SCHEME

# இலங்கை மத்திய வங்கி

# இலங்கை வைப்புக் காப்புறுதி திட்டம் குறித்து தேசிய அளவிலான பொது விழிப்புணர்வு ஆய்வுக்கான அறிவிப்பு

இலங்கை மத்திய வங்கியின் வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மானங்கள் திணைக்களத்தின் கீழ் செயல்படுத்தப்படும் இலங்கை வைப்புக் காப்புறுதி திட்டம் குறித்து பொதுமக்களுக்கு உள்ள விழிப்புணர்வு நிலையை அளவிடும் நோக்குடன் நாடளாவிய அளவீட்டொன்று ஆரம்பிக்கப்படுவதை, இலங்கை மத்திய வங்கி மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றது.

இவ்வளவீட்டு நடவடிக்கை, உலக வங்கியின் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு மூலம் நிதியளிக்கப்படும் நிதியியல் துறை பாதுகாப்புவலை வலுப்படுத்தல் திட்டத்தின் ஒரு பகுதியாக முன்னெடுக்கப்படுகிறது.

இவ்வளவீடு, இலங்கை மத்திய வங்கியின் சார்பில், காண்டார் லங்கா (பிரைவேட்) லிமிடெட் எனும் வெளி நிறுவனத்தின் கணக்கெடுப்பாளர்களின் மூலம் மேற்கொள்ளப்படும். செப்டெம்பர் 2025 முதல் அக்டோபர் 2025 வரையான காலப்பகுதியில், நாட்டின் பல்வேறு பிரிவினைச் சேர்ந்த பொதுமக்களை இவ்வளவீட்டில் உள்ளெடுப்பதே இலங்கை மத்திய வங்கியின் நோக்கமாகும்.

இந்த அளவீட்டிற்காக சேகரிக்கப்படும் தகவல்கள், இவ்வளவீட்டின் நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படும் என்பதையும், அவை இரகசியமாக காக்கப்படும் என்பதையும் இலங்கை மத்திய வங்கி உறுதியளிக்கிறது. எனவே, இந்த கணிப்பு ஆய்வுக்கான வினாத்தாளுக்கு உங்கள் முழுமையான ஒத்துழைப்பை அன்புடன் கோருகிறோம். இத்தேசிய ரீதியான அளவீட்டில் நீங்கள் அளிக்கும் மதிப்புமிக்க பங்களிப்பிற்காக, இலங்கை மத்திய வங்கி உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

இந்த அளவீட்டுடன் தொடர்புடைய ஏதேனும் கேள்விகள், சந்தேகங்கள் அல்லது முறைப்பாடுகள் இருந்தால், தயங்காமல் கீழ்காணும் தொடர்பு இலக்கங்களினூடாக எங்களை அணுகுமாறு கேட்டுக்கொள்கிறோம்

தொலைபேசி இலக்கம்: 1935 (துரித அழைப்பு)

மின்னஞ்சல் முகவரி: fssnpcomplain@cbsl.lk

**பணிப்பாளர்**

**வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மானங்கள் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**